செய்யாறு ஊராட்சி ஒன்றியம் கீழ்ப்புதுப்பாக்கம் வருவாய் கிராமம்
கீழ்புதுப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை திருமதி. சுகன்யா பாரி

நாள்: 05.03.2024

பொருள்: – குடியிருப்பு மனைபிரிவு – திருவண்ணாமலை மாவட்டம் – செய்யாறு வட்டம் – செய்பார் ஊராட்சி ஒன்றியம் கீழ்புதுப்பாக்கம் கிராம சர்வே எண்– 131/5எ ஏக்கர் 0.50 செண்டு இடத்தில் உள்ள குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழில்நுட்ப இசைவு அளிக்கப்பட்ட மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி மூலம் இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடுதல் – சார்பு.

பார்வை: – நகர ஊரமைப்பு உதவி இயக்குனர் திருவண்ணாமலை மாவட்டம் அவர்கள் நடவடிக்கை Roc No. QBEGZDKT/2024/TCP நாள்:26.02.2024
கீழ்புதுப்பாக்கம் ஊராட்சி மன்ற தீர்மானம் எண். 34 நாள்: 05.03.2024

.....

உத்திரவு: –

பார்வையில் காணும் நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவண்ணாமலை மாவட்டம் அவர்களின் உத்தரவின்படி திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், செய்யாறு ஊராட்சி ஒன்றியம், கீழ்ப்புதுபாக்கம் ஊராட்சி, கீழ்ப்புதுப்பாக்கம் வருவாய் கிராமம் சர்வே எண்.131/5எ– ஏக்கர் 0.50 செண்ட் இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழிநுட்ப இசைவு அளிக்கப்பட்டதை தொடர்ந்த அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் விதி எண். 9–ன்படி மாற்று கட்டணம் 3% விழுக்காடு தொகை ரூபாய். 2470/– மற்றும் கூராய்வு கட்டணம் 14 மனைகளுக்கு ரூபாய். 14,000/– ஆக மொத்தம் ரூபாய். 16,470/– அதற்குரிய வங்கி கணக்கில் செலுத்தப்பட்டதை தொடர்ந்து மனை எண்கள் 1 முதல் 14 வரை உள்ள மனைகளுக்கு தொழில் நுட்ப இசைவு அளிக்கப்பட்ட குடியிருப்பு மனைபிரிவிற்காக வரைபடத்தில் உட்பிரிவுக்கும், உள்ளாட்சி மூலம் இறுதி ஒப்புதல் அளித்து பஞ்சாயத்து மூலமாக உத்தரவு விடப்பட்டுள்ளது.

ஊராட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய சாலை மற்றும் குடிநீர் தேக்க தொட்டி கட்டும் இடம் மற்றும் மின்சார வாரியத்திற்கு ஒதுக்கிய இடத்திற்கு பத்திர பதிவு எண்.433/2024 நாள்: 05.02.2024 ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்திற்கு "A.M.V நகர்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட மனைகளுக்கு பத்திரப் பதிவு செய்து கொள்ள சான்று வழங்கி உத்திரிவிடப்படுகிறது.

Scanned with OKEN Scanner

மனை எண்கள்:

1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14 வரையிலான மனைகள் பத்திர பதிவு செய்ய உத்தரவு வழங்கப்படுகின்றது.

தலைவர்,
கீழ்புதுப்பாக்கம் ஊராட்சி,
செய்யாறு ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்:

திரு. M.விஜயராகவன் த/பெ V.மாரிமுத்து கவுண்டர்
திரு. M.சத்தியமூர்த்தி த/பெ V.மாரிமுத்து கவுண்டர்
கீழ்புதுப்பாக்கம், செய்யாறு.

நகல்:

1. நகல் பணிவு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவண்ணாமலை.
2. நகல் சார்பதிவாளர் அவர்கள், சார்பதிவாளர் அலுவலகம், செய்யார்.
3. நகல் ஊராட்சி செயலாளர், கீழ்புதுப்பாக்கம்.
4. நகல் TNRERA, Egmore, சென்னை.

Scanned with OKEN Scanner